# தூத்துக்குடி மாநகராட்சி

## கூட்டப்பொருள்

2017ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 16.11.2017 | 1) தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட 60 வார்டு பகுதிகளிலும் வசிக்கும் அனைத்து மக்களும் 100 விழுக்காடு கழிப்பறைகளை மட்டுமே பயன்படுத்தி வருகின்றனர். திறந்த வெளியினை கழிப்பிடமாக பயன்படுத்துவதில்லை. இப்பகுதிகளில் அமைந்துள்ள பள்ளி மாணவ/மாணவிகளிடமும் அவர்களின் வீடுகளிலும் கழிப்பறையைத்தான் பயன்படுத்தி வருகிறோம் என உறுதிமொழி கடிதங்கள் பெறப்பட்டுள்து. இம்மாநகராப்பகுதியில் இயங்கும் சுய உதவிக்குழுக்கள் மூலமும் அவர்கள் பகுதிகளில் வசிக்கும் அனைத்து மக்களுக்கும் கழிப்பறையைத்தான் பயன்படுத்தி வருகிறோம் என உறுதிமொழி கடிதங்கள் பெறப்பட்டுள்ளது. இதன் விபரம் மாமன்றத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.<br>மேலும் நாளிதழ்களில் மேற்படி பகுதிகளில் உள்ள மக்கள் திறந்த வெளியினை கழிப்பிடமாக பயன்படுத்துவதில்லை எனவும் ஏதேனும் ஆடசேபனை இருந்தால் தெரிவிக்கலாம் என அறிவிப்பு செய்யப்பட்டது. ஏந்தவித ஆட்சேபணை வரப்பெறவில்லை.<br>எனவே மேற்படி நடவடிக்கைகளின் அடிப்படையில் தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளிலும் வசிக்கும் பொதுமக்கள் அனைவரும் கழிப்பறைகளைதான் 100 விழுக்காடு பயன்படுத்தி வருகின்றனர் என்றும் திறந்த வெளியினை பயன்படுத்தவில்லை என பிரகடனபடுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம். எச்2/7958/13 | 104) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | 2) தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் முதற்கட்டமாக பாதாளச்சாக்கடை திட்டத்தினை செயல்படுத்த 2005ம் ஆண்டில் தமிழக அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி திட்டம் நான்கு சிப்பங்களாக பிரிக்கப்பட்டு செயல்படுத்த திட்டமிடப்பட்டது. இதில் முதல் மூன்று சிப்ப பணிகள் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் மாநகராட்சிக்கு சொந்தமான புல்தோட்டம் பகுதியில் அமைப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டது. புல்தோட்டம் பகுதியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான பணியானது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ரூ 17.99 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று | 105) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

வந்தது. இந்நிலையில் 2009ஆம் ஆண்டில் மேற்படி பகுதிவாழ் மக்கள் தெரிவித்த ஆட்சேபனையின் காரணமாக மேற்படி கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான மாற்று இடம் துத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான தருவைக்குளம் உரக்கிடங்கு பகுதியில் தேர்வு செய்யப்பட்ட நிலையில் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை வெளியேற்றுவதற்கான அனுமதி வழங்கப்படாததால் மேற்படி பணியானது துவக்கப்படவில்லை.

இந்நிலையில் 24 MLD கொள்ளளவு உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை DBFOT (Desig Build Fnace Oãrate and Transfer) முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (டி) எண். 147 நாள் 20.03.2013ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி உத்திரவினைத் தொடர்ந்து 24 MLD திறன் கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தினை OEG & WABAG நிறுவனமானது ரூ.10.00 இலட்சத்தினை மறைமுக மான்யமாக மாநகராட்சிக்கு செலுத்தியதன் அடிப்படையில் DBFOT முறையில் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு தூத்துக்குடி மாநகராட்சி சார்பில் செயற்பொறியாளரால் கையொப்பமிடப்பட்ட 02.08.2013ம் தேதிய ஒப்பந்தப்பத்திரம் வாயிலாக அனுமதி வழங்கப்பட்டது.

மேற்படி பணிக்கு 02.09.2013ல் ஒப்பந்தப்பத்திரம் இறுதி செய்யப்பட்ட நிலையில் மேற்படி நிறுவனம் பணியினை ஆரம்பித்து ஆரம்ப கட்ட பணி மட்டும் நடைபெற்றது அதன் பின் தொடர் பணியினை மேற்கொள்ள எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேற்படி நிறுவனத்திற்கு 02.09.2013 முதல் 28.03.2016 வரையிலான காலத்தில் பலமுறை பணியினை மேற்கொள்ள அறிவிப்பு வழங்கியும் பணியில் முன்னேற்றம் எதுவும் இல்லை. இறுதியாக ஒப்பந்த விதிகளின்படி 28.03.2016இல் இறுதி எச்சரிக்கை அறிவிப்பு பதில் திருப்திகரமாக இல்லாததால் இம்மாநகராட்சி கடித எண். இ3/11512/2007 நாள் 27.07.2016ன் படி OEG & WABAG நிறுவனத்தின் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது.

மேலும் மேற்படி கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்துவது குறித்து இவ்வலுவலக இ3/11512/2007 எண்ணிட்ட 05.08.2016ம் தேதிய கடிதம் வாயிலாக சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டதின் அடிப்படையில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்படி திட்டத்தினை ஆய்வு செய்து கழிவுநீர் கோட்டம், தூத்துக்குடி அவர்களின் 51016/TCNUGSS/STP/JDO/2016 எண்ணிட்ட 05.10.2016ம் தேதிய கடிதத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ரூ 40.00 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| | இந்நிலையில், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 17817/2013/UGSS எண்ணிட்ட 11.05.2017 தேதிய கடிதத்தில் தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள M/s வேதாந்தா தாமிர ஆலை 24 MLD திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையம் அமைத்து அதனை மேற்படி நிறுவனத்தின் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் மேற்படி கழிவுநீரை சுத்திகரிப்பு செய்து கிடைக்கப்பெறும் நீரினை மேற்படி நிறுவனத்தின் பயன்பாட்டிற்கு எடுத்துச்செல்லும் வகையிலும் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்கொள்ள மேற்படி நிறுவனம் தயார் நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மாநகராட்சியில்லிருந்து தொழிற்சாலை நிறுவனங்களிடம் மாநகராட்சி கழிவுநீரை எடுத்துச்செல்ல ஏதுவாக விருப்ப கேட்பு (Expression of interest) கோருவதனால் தூத்துக்குடி மாநகராட்சியானது முன்மாதிரியாக செயல்படுவதுடன் மாநகராட்சிக்கு பொருளாதாரரீதியாக பயனுள்ளதாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>மேற்படி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு தூத்துக்குடி மாநகராட்சியில் உற்பத்தியாகும் கழிவுநீரினை (Raw Sewage) தொழிற்சாலைகள் தாங்களாகவே சுத்திகரிப்பு செய்து சுநத்திகரிக்கப்பட்ட கழிவு நீரினை தொழிற்சாலைகள் பயன்படுத்த ஏதுவாக மாநகராட்சியால் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. எனவே அத்தகையை தொழிற்சாலைகள் தாங்களாகவே முன்வந்து விருப்ப கேட்பு முறையில் மேற்படி பணியினை DBFOT திட்ட முறையில் மேற்கொள்ளவும் அதந்காக தேவைப்படும் அனைத்து துறையின் அனுமதியினை மேற்படி தொழிற்சாலைகளே பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் 07.07.2017ம் தேதிய விருப்ப கேட்பு அறிவிப்பில் கோரப்பட்டது.<br>கழிவு மூலப்பொருள் விற்பனைக்கான விருப்ப கேட்பு கடிதம் DBFOT முறையில் 07.07.2017 ல் கோரப்பட்டது. தற்போது தமிழ்நாட்டின் ஏனைய நகராட்சி, மாநகராட்சிகளில் மற்றும் சென்னை மெட்ரோ வாட்டர் ஆகிய நிறுவனத்தின் கழிவு மூலப்பொருள்கள் (Raw Sewage) விற்பனை செய்வதாக தெரியவில்லை. ஆகையால் கழிவுமூலப்பொருள்களுக்கான சந்தை மதிப்பு மற்றும் வருங்கால சந்தை மதிப்பு அறிய இயலவில்லை. மேலும் DBFOT திட்ட முறையின் படி தொடர்ச்சியாக 30 ஆண்டுகளுக்கு கழிவுநீருக்கான சந்தை மதிப்பு முன் கூட்டியே நிர்ணயம் செய்வதால் மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படும். மேற்படி காரணத்தினால் கழிவுநீர் மூலப்பொருளை ((Raw Sewage) Secondary Treated Effluent Water மாதிரியாக நேரடியாக தொழிற்சாலை நிறுவனத்திற்கு விற்பனை செய்வதன் மூலம் கழிவு மூலப்பொருள்களுக்கு (Raw Sewage) குறிப்பிட்ட காலத்திற்கு விலை மறு நிர்ணயம் செய்ய இயலும் என்பதால் மாநகராட்சிக்கு இலாபகரமானதாக இருக்கும் என்ற | |

காரணத்தினால் கழிவு நீர் மூலப்பொருளை நேரடி விற்பனை செய்வதற்கு ஏதுவாக மறு விருப்ப கேட்பு ( Revised EOI) கோருவதற்கு மாமன்றம் தீர்மானம் எண். 86 நாள் 19.09.2017ன் படி அனுமதி வழங்கியுள்ளது.

மாமன்ற தீர்மானம் எண். 86 நாள் 19.09.2017ன் அடிப்படையில் மறுவிருப்ப கேட்பு 16.10.2017 அன்று கோரப்பட்டதில் கீழ்காணும் இரண்டு நிறுவனங்களில் இருந்து விருப்ப கேட்பு வரப்பெற்றுள்ளது.

1) மெசர்ஸ். பசிபிக் டெக்னிக்கல் சர்வீசஸ் இந்தியா பிரைவேட் லிட்,
A-5 வது தளம், கோகுல் ஆர்கேட், கிழக்கு பகுதி
2,2Aசர்தார் படேல் ரோடு, அடையார், சென்னை 600 020
2) மெசர்ஸ் வேதாந்தா லிமிடெட்,
ஸ்டெர்லைட் காப்பர்
சிப்காட் தொழிற்சாலை வளாகம்
மதுரை பைபாஸ் சாலை
தூத்துக்குடி

வரப்பெற்ற மேற்படி இரண்டு நிறுவனங்களின் விருப்ப கேட்புகளை தொழில்நுட்ப ரீதியாக பரிசீலனை செய்யப்பட்டது. மெசர்ஸ். பசிபிக் டெக்னிக்கல் சர்வீசஸ் இந்தியா பிரைவேட் லிட், நிறுவனத்தினரால் சமர்ப்பிக்கப்பட்ட விருப்ப கேட்பானது கீழ்காணும் காரணங்களால் தொழில்நுட்ப ரீதியாக தகுதியற்றது என்று தொழில்நுட்ப குழு தங்களுடைய 09.11.2017ம் தேதிய அறிக்கையில் தெரிவித்துள்ளது.

1) மேற்படி நிறுவனம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பது குறித்து எந்தவித தொழில்நுட்ப விபரங்களும் (Technical Details) சமர்ப்பிக்கவில்லை.
2) விருப்ப கேட்பில் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை அவருடைய சொந்த இடத்தில் உள்ள தொழிற்சாலைக்கு உபயோகப்படுத்துவதாகவும், விவரப்படிவத்தில் ( Detailed format) வேதாந்தா மற்றும் ஸ்பிக் நிறுவனத்திற்கு சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை கொடுப்பதாகவும் கூறியுங்ளளார். ஆனால் அந்நிறுவனத்திற்கு சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை கொடுப்பதாகவும் கூறியுள்ளார். ஆனால் அந்நிறுவனங்களின் எந்தவொரு அத்தாட்சி கடிதமும் இணைக்கப்படவில்லை.
3) கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து கிடைக்கக்கூடிய உற்பத்தி கழிவுகளை எவ்வித பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் என்பது குறித்து விபரம் ஏதும் தெரிவிக்கப்படவில்லை.
4) மேற்படி நிறுவனத்தின் வருடாந்திர செயல் திறன் மிகவும் குறைவாக

0.81 கோடி மட்டுமே செய்துள்ளனர்.

5) இந்த நிறுவனம் 6 MLD கழிவுநீரை மட்டுமே 10 வருடங்களுக்கு வாங்க போவதாக விருப்ப கேட்பில் கூறியுள்ளார்கள்.

மாநகராட்சி கழிவுநீர் மூலப்பொருளையே நேரடியாக விற்பனை செய்வதனால் விரிவான End Usage Mechanism மிகவும் இன்றியமையாததாகும், சுத்திகரிக்கப்பட்ட நீரினை பயன்படுத்துவதற்கு நிறுவனங்கள் ஏதும் இல்லை என்றால் அதன் காரணமாக கழிவு நீர் மூலப்பொருள் வெளியேற்றுவதற்கு தகுதியற்றதாகிவிடும். இதனை தொடர்ந்து சுற்றுசூழல் பாதிப்பு மற்றும் சுகாதாரகேடு ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

எனவே ஏற்கனவே கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு பணியாணை வழங்கி பணி திருப்திகரமாக இல்லாத காரணத்தினால் 27.07.2016ன் படி ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு M/s DEG WABAG என்ற நிறுவனமும் ஒரே முகவரியில் அமைந்துள்ள நிறுவனங்களாக இருப்பதாக தொழில்நுட்ப குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இதன் விபரம் தொழில்நுட்ப குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இதன் விபரம் தொழில்நுட்ப குழுவின் பரிசீலனையில் எடுத்துக்கொள்ளப்படாவிட்டாலும் கூட ஆணையர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட வேண்டும் என தொழில்நுட்ப குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட காரணங்களால் மேற்படி நிறுவனம் தொழில்நுட்ப ரீதியாக தகுதியற்றதாக தொழில்நுட்ப குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப குழுவின் அறிக்கையின் அடிப்படையில் M/s வேதாந்தா நிறுவனத்தின் விருப்ப கேட்பு பரிசீலிக்கப்பட்டது. M/s வேதாந்தா நிறுவனம் தூத்துக்குடி மாநகராட்சியின் கழிவுநீர் மூலப்பொருளை ஒரு மில்லியன் லிட்டருக்கு ரூ.1250/— வீதம் மாநகராட்சிக்கு வழங்குவதாகவும் நாள் ஒன்றுக்கு 24 MLD கழிவுநீரை தொடர்ச்சியாக 25 வருடங்களுக்கு எடுத்துக் கொள்வதாகவும் தெரிவித்து மேற்படி நிறுவனத்தின் தொழில்நுட்ப அறிக்கை மற்றும் நிதி தொடர்பான விபரங்களுடன் கேட்பு அளித்துள்ளனர்.

மேற்படி நிறுவனம் சமர்ப்பித்துள்ள பிரேரணையின் படி மேற்படி நிறுவனத்திற்கு கழிவு நீரை வழங்குவதால் மாநகர கழிவு நீரானது மேற்படி நிறுவனம் மூலம் வெளியேறுவதுடன் சுற்றுப்புறசூழல் மாசுபாடு மற்றும் பொது சுகாதார பிரச்சனைகள் தீருவதற்கு வாய்ப்பாக அமையும் தூத்துக்குடி

| | | |
|---|---|---|
| | மாநகரப்பகுதியில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் இல்லாததால் கழிவுநீர் முழுவதும் மழைநீர் வடிகாலில் செல்கிறது. இதனால் பெரும் சுகாதார கேடு ஏற்படுகிறது. தற்போது ஒரு சில இடங்களில் பாதாளச்சாக்கடைத்திட்டம் செயல்படும் நிலையில் 5 MLD கழிவுநீரானது பக்கிள் ஓடைக்கு அனுப்பப்படுகிறது. இதன் மூலம் அவ்வப்போது பொது சுகாதாரப்பிரச்சைகளும் எழுகின்றது. பாதாளச்சாக்கடை திட்டமானது 2005ம் ஆண்டில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு குடிநீர் வடிகால வாரியமானது அடுத்த ஆறுமாதத்திற்குள் மேற்படி பணியானது செயல்படும் வகையில் முன்னேற்றம் கண்டுள்ளதாக தெரிவித்துள்ளது. தற்போது கழிவுநீரை வெளியேற்றுவதற்கும் சுத்திகரிப்பதற்கும் வழிவகைஇல்லாததால் பாதாளச்சாக்கடை திட்ட பணிகள் முடிவடைந்தும் திட்டம் செயல்படுத்த இயலாத சூழல் எழுந்துள்ளது. ஆதனால் மாநகராட்சிக்குபெருமளவில்லை நிதியிழப்பு ஏற்படும் நிலை மற்றும் சுகாதாரப்பிரச்னை ஏற்படும் நிலை உள்ளது.<br><br>தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமானது 24 MLD திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை அமைத்திடும் பணிக்கு ரூ. 40 கோடி மதிப்பிடப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாநகராட்சியானது ஏற்கனவே பல்வேறு திட்டங்களின் வாயிலாக கடன் பெற்றுள்ள நிலையில் பெருமளவு செலவினத்தை ஏற்க இயலாத நிலை உள்ளது. மேற்படி காரணத்தினால் 24 MLD திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் DBFOT முறையில் அமைப்பதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (டி) எண் 147 நாள் 20.03.2013ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே கழிவு மூலப்பொருளை (Raw Sewage) நேரடியாக தனியார் நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதன் வாயிலாக கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து தொடர்ந்து பராமரிப்பு பணி தொடர்பான வெலவினங்களில் இருந்து மாநகராட்சி விடுபட ஏதுவாக அமையும்.<br><br>மேலே குறிப்பட்டுள்ள காரணங்களினால் M/s வேதாந்தா நிறுவனத்திற்கு மாநகராட்சி கழிவுநீர் மூலப்பொருளை நேரடி விற்பனை செய்வதற்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரணை அனுப்பி உரிய அனுமதி பெற்ற பின்னர் நடவடிக்கை எடுக்கலாம்.<br><br>16.10.2017 அன்று கோரப்பட்ட விருப்ப கேட்பு கடிதத்தில் கண்டுபிடிக்கப்பட்ட விலை (Price Discovered) கழிவுநீர் விற்பனைக்கு தொடக்க விலையாக நிர்ணயம் செய்வதற்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரிடம் பிரேரணை அனுப்பி உரிய அனுமதி பெற்ற பின் நடவடிக்கை எடுக்கலாம். கழிவுநீர் விற்பனையால் கிடைக்கும் முழு வருவாயும் பாதாளச்சாக்கடை திட்டத்தின் பராமரிப்பு பணிகளுக்காக செலவிடப்பட | |

| | | |
|---|---|---|
| | வேண்டும். சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரின் உரிய அனுமதி பெற்று கழிவு நீர் விற்பனை செய்யும்பட்சத்தில் மேற்படி சுத்திகரிப்பு நீரின் (Treated Water) தரம் மற்றும் சுத்திகரிப்பு செய்யும் நிலையில் இறுதியாக உருவாகும் கழிவு (Sludge) ஆகியவை தொழிற்சாலையின் முழுப்பொறுப்பாகும். மேலும் மேற்படி கழிநீர் சுத்திகரிப்பு நிலையம் மூலம் கழிவுநீரினை சுத்தப்படுத்துவது தொடர்பாக மேற்படி நிறுவனமானது TNPCB , CPHEEO ஆகியவற்றின் வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் அரசு சட்டவிதிகளுக்குட்பட்டு சம்பந்தப்பட்ட துறைகளை அணுகி அதற்கான அனுமதியினை பெற்றுக்கொள்ள வேண்டியத மேற்படி நிறுவனத்தின் பொறுப்பாகும்.<br><br>எனவே M/s வேதாந்தா நிறுவனத்திற்கு Scale of sewage Model ல் கழிவுநீரினை விற்பனை செய்வதற்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் உரிய அனுமதி கோரி பிரேரணை அனுப்ப மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு –மாமன்றம் அனுமதிக்கலாம். இ3/ 011512/07** | |
| | 3)மாமன்ற தீர்மானம் எண். 86 நாள் 19.092017ன் அடிப்படை கழிவுநீரை நேரடி விற்பனை செய்வதற்கு மறு விருப்ப கேட்பு 16.10.2017 அன்று கோரப்பட்டதில் கீழ்காணும் இரண்டு நிறுவனங்களில் இருந்து விருப்ப கேட்பு வரப்பெற்றுள்ளது.<br><br>1) மெசர்ஸ். பசிபிக் டெக்னிக்கல் சர்வீசஸ் இந்தியா பிரைவேட் லிட்,<br>A-5 வது தளம், கோகுல் ஆர்கேட், கிழக்கு பகுதி<br>2,2Aசர்தார் படேல் ரோடு, அடையார், சென்னை 600 020<br>2) M/s வேதாந்தா லிமிடெட்,<br>ஸ்டெர்லைட் காப்பர்<br>சிப்காட் தொழிற்சாலை வளாகம்<br>மதுரை பைபாஸ் சாலை<br>தூத்துக்குடி<br>தொழில்நுட்ப குழுவின் அறிக்கையின் அடிப்படைமயில் M/s வேதாந்தா நிறுவனத்தின் விருப்ப கேட்பு பரிசீலிக்கப்பட்டது. M/s வேதாந்தா நிறுவனம் தூத்துக்குடி மாநகராட்சியின் கழிவுநீர் மூலப்பொருளை ஒரு மில்லியன் லிட்டருக்கு ரூ. 1250/– வீதம் மாநகராட்சிக்கு வழங்குவதாகவும் நாள் ஒன்றுக்கு 24 MLD கழிவு நீரை தொடர்ச்சியாக 25 வருடங்களுக்கு எடுத்துக்கொள்வதாகவும் தெரிவித்து மேற்படி நிறுவனத்தின் தொழில்நுட்ப அறிக்கை மற்றும் நிதி தொடர்பான விபரங்களுடன் கேட்பு அளித்துள்ளனர்.<br>மேற்படி நிறுவனம் சமர்ப்பித்துள்ள பிரேரணையின் படி மேற்படி | 106) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

நிறுவனத்திற்கு கழிவு நீரை வழங்குவதால் மாநகர கழிவு நீரானது மேற்படி நிறுவனம் மூலம் வெளியேறுவதுடன் சுற்றுப்புற சூழல் மாசுபாடு மற்றும் பொது சுகாதார பிரச்சனைகள் தீருவதற்கு வாய்ப்பாக அமையும். தூத்துக்குடி மாநகரப்பகுதியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் இல்லாததால் கழிவு நீர் முழுவதும் மழைநீர் வடிகாலில் செல்கிறது. இதனால் பெரும் சுகாதார கேடு ஏற்படுகிறது. தற்போது ஒரு சில இடங்களில் பாதாளச் சாக்கடைத்திட்டம் செயல்படும் நிலையில் 5 MLD கழிவுநீரானது பக்கிள் ஓடைக்கு அனுப்பப்படுகிறது. இதன் மூலம் அவ்வப்போது பொது சுகாதாரப்பிரச்சனைகளும் எழுகின்றது. பாதாள சாக்கடைத்திட்டமைானது 2005ம் ஆண்டில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமானது அடுத்த ஆறுமாதத்திற்குள் மேற்படி பணியானது செயல்படும் வகையில் முன்னேற்றம் கண்டுள்ளதாக தெரிவித்துள்ளது. தற்போது கழிவுநீரை வெளியேற்றுவதற்கும் சுத்திகரிப்பதற்கும் வழிவகை இல்லாததால் பாதாளச்சாக்கடை திட்ட பணிகள் முடிவடைந்தும் திட்டம் செயல்படுத்த இயலாத சுழல் எழுந்துள்ளது. ஆதனால் மாநகராட்சிக்கு பெருமளவில் நிதியிழப்பு ஏற்படும் நிலை மற்றும் சுகாதார பிரச்சனைகள் ஏற்படும் நிலை உள்ளது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமானது 24 MLD திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை அமைத்திடும் பணிக்கு ரூ.40 கோடி மதிப்பிடப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாநகராட்சியானது ஏற்கனவே பல்வேறு திட்டங்களின் வாயிலாக கடன் பெற்றுள்ள நிலையில் பெருமளவு செலவினத்தை ஏற்க இயலாத நிலை உள்ளது. மேற்படி காரணத்தினால் 24 MLD திறன்கொண்ட கழிவுநீர் வழங்கல் துறை அரசாணை (டி) எண் 147 நாள் 20.03.2013ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே கழிவு மூலப்பொருளை (Raw Sewage) நேரடியாக தனியார் நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதன் வாயிலாக கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து தொடர்ந்து பராமரிப்பு பணி தொடர்பான செலவினங்களில் இருந்து மாநகராட்சி விடுபட ஏதுவாக அமையும்.

எனவே குறிப்பிட்டுள்ள காரணங்களினால் மெசர்ஸ் வேதாந்தா நிறுவனத்திற்கு மாநகராட்சி கழிவுநீர் மலப்பொருளை நேரடி விற்பனை செய்வதற்கு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரணை அனுப்பி உரிய அனுமதி பெற்ற பின்னர் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

16.10.2017 அன்று கோரப்பட்ட விருப்ப கேட்பு கடிதத்தில் கண்டுபிடிக்கப்பட்ட விலை (Price Discovered) கழிவு நீர் விற்பனைக்கு தொடக்க விலையாக நிர்ணயம் செய்வதற்கு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையாளரிடம் பிரேரணை அனுப்பி உரிய அனுமதி பெற்ற பின் நடவடிக்கை

| | | |
|---|---|---|
| | எடுக்கப்பட உள்ளது. கழிவு நீர் விற்பனையால் கிடைக்கும் முழு வருவாயும் பாதாளச்சாக்கடை திட்டத்தின் பராமரிப்பு பணிகளுக்காக செலவிடப்பட வேண்டும். சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையரின் உரிய அனுமதி பெற்று கழிவு நீர் விற்பனை செய்யும்பட்சத்தில் மேற்படி சுத்திகரிப்பு நீரின் (Treated Water) தரம் மற்றும் சுத்திகரிப்பு செய்யும் நிலையில் இறுதியாக உருவாகும் கழிவு (Sludge) ஆகியவை தொழிற்சாலையின் முழுப்பொறுப்பாகும். மேலும் மேற்படி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மூலம் கழிவுநீரினை சுத்தப்படுத்துவது தொடர்பாக மேற்படி நிறுவனமானது TNPCB, CPHEEO ஆகியவற்றின் வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் அரசு சட்டவிதிகளுக்குட்பட்டு சம்பந்தப்பட்ட துறைகளை அணுகி அதற்கான அனுமதியினை பெற்றுக்கொள்ள வேண்டியது மேற்படி நிறுவனத்தின் பொறுப்பாகும்.<br>எனவே 14.11.2017 அன்று வேதாந்தா நிறுவனம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான 15 ஏக்கர் இடம் 25 வருடத்திற்கு குத்தகை அடிப்படையில் மாநகராட்சியிடமிருந்து கோரியுள்ளார். மேற்படி நிறுவனம் விரிவான வரைபடம் வழங்கியுள்ளார்கள்.<br>தூத்துக்குடி மாநகராட்சியின் பொறியியல் குழு முதற்கட்ட வடிவமைப்புகளை ஆய்வு செய்து தொழில்நுட்ப ரீதியாக மேற்படி கழிவுநீர் நிலையம் அமைப்பதற்கான முதற்கட்ட ஆய்வை அங்கீகரித்துள்ளனர்.<br>வேதாந்தா நிறுவனம் கோரியுள்ள 15 ஏக்கர் நிலம் தருவைக்குளம் உரக்கிடங்கு அருகில் 245/pt, 247/pt. 249/pt மற்றும் 249/ pt சர்வே எண்களில் உள்ள இடத்தை கொடுப்பது சாத்தியம் என கண்டறியப்பட்டது.<br>மேற்கண்ட 15 ஏக்கர் இடத்தினை அரசு விதிகளின்படி குத்தகை அடிப்படையில் வழங்குவது மாநகராட்சிக்கு சாதகமாக உள்ளது. தருவைக்குளம் உரக்கிடங்கு பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான 500 ஏக்கர் இடம் உள்ளதால் அதன் அருகில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தற்போது கழிவு நீர் குழாய் அமைக்கப்பட்டு உள்ளதன் அருகில் இத்திட்டத்திற்காக 15ஏக்கர் இடத்தினை அரசு நிபந்தனைகளுக்குட்பட்டு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு உரிய அனுமதிக்காக நகராட்சி நிர்வாக ஆணையருக்கு பிரேரணை அனுப்பி வைக்கவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>அலுவலக குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ3/011512/07 | |
| | 4)<br>Est.No: 119/17-18<br>Est.Amt: 49.50 Lakhs<br>இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – நுண்ணுயிர் திடக்கழிவு | 107)அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | மேலாண்மை திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி எட்டயாபுரம் ரோடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு அருகில் நுண்உரம் செயலாக்கும் மையம் அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.49,50,000/—க்கு பணிக்கு 01.11.2017 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது.<br>1. திரு. K.Muthuraman<br>மதிப்பீட்டை விட 0.53% குறைவு (ரூ.4859916.00)<br>2. திரு. T.Murugan<br>மதிப்பீட்டை விட 0.05% குறைவு (ரூ.4883324.00)<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீடு கொடுத்துள்ள திரு. மு.முத்துராமன் அவர்களின் (மதிப்பீட்டை விட 0.53ரூ குறைவு (ரூ.4859916.00)) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>1. மேற்படி மதிப்பீடு தொகை ரூ.49.50 இலட்சத்திற்கு அனுமதி வழங்கலாம்.<br>2. பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மதிப்பீட்டை விட 0.53% குறைவாக கொடுத்த திரு. K.Muthuraman ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். E1/01158/2015 | |
| | 5)Est.No: 120/17-18<br>Est.Amt: 49.50 Lakhs<br>இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் — நுண்ணுயிர் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி அம்பேத்கார் நகர் அருகில் நுண்உரம் செயலாக்கும் மையம் அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.49,50,000/—க்கு பணிக்கு 01.11.2017 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது.<br>1) திரு. J.Suresh Jeyakumar<br>மதிப்பீட்டை விட 0.19ரூ குறைவு (ரூ.4876538.00)<br>2) திரு. T.Murugan<br>மதிப்பீட்டை விட 1.16ரூ அதிகம் (ரூ.4942433.00) | 108) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக் கப்பட்டது. அலுவலகக் குறிப்பு 3 அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீடு கொடுத்துள்ள திரு. J.சுரேஷ் ஜெயக்குமார் அவர்களின் (மதிப்பீட்டை விட 0.19ரூ குறைவு (ரூ.4876538.00)) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு :<br><br>1) மேற்படி மதிப்பீடு தொகை ரூ.49.50 இலட்சத்திற்கு அனுமதி வழங்கலாம்.<br>2) பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மதிப்பீட்டை விட 0.19ரூ குறைவாக கொடுத்த திரு. J.Suresh Jeyakumar ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>File No: E1/01158/2015 | |
| | 6) Est.No: 121/17-18<br><br>Est.Amt: 49.50 Lakhs<br><br>இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – நுண்ணுயிர் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி மேட்டுப்பட்டி அருகில் நுண்உரம் செயலாக்கும் மையம் அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.49,50,000/–க்கு பணிக்கு 01.11.2017 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது.<br><br>1. திரு. J.Suresh Jeyakumar<br><br>மதிப்பீட்டை விட 0.19% குறைவு (ரூ.4876538.00)<br><br>2. திரு. T.Murugan<br><br>மதிப்பீட்டை விட 1.16% அதிகம் (ரூ.4942433.00)<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீடு கொடுத்துள்ள திரு. து.சுரேஷ் ஜெயக்குமார் அவர்களின் (மதிப்பீட்டை விட 0.19ரூ குறைவு (ரூ.4876538.00)) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு :<br>1)மேற்படி மதிப்பீடு தொகை ரூ.49.50 இலட்சத்திற்கு அனுமதி வழங்கலாம்.<br>2)பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். | 109) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக் கப்பட்டது. அலுவலகக் குறிப்பு 3 அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 3)மதிப்பீட்டை விட 0.19ரூ குறைவாக கொடுத்த திரு. J.Suresh Jeyakumar ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>E1/01158/2015 | |
| | 7) Est.No: 125/17-18<br><br>Est.Amt: 49.50 Lakhs<br><br>இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – நுண்ணுயிர் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி பெருமாள்புரம் அருகில் நுண்உரம் செயலாக்கும் மையம் அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.49,50,000/–க்கு பணிக்கு 01.11.2017 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது.<br><br>1. திரு. S.Rambola<br><br>மதிப்பீட்டை விட 0.02% குறைவு (ரூ.4884760.40)<br><br>2. திரு. S.Sutharson<br><br>மதிப்பீட்டை விட 1.61% அதிகம் (ரூ.4964723.00)<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீடு கொடுத்துள்ள திரு.ளு. ரம்போலா அவர்களின் (மதிப்பீட்டை விட 0.02ரூ குறைவு (ரூ.4884760.40)) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு :<br>1)மேற்படி மதிப்பீடு தொகை ரூ.49.50 இலட்சத்திற்கு அனுமதி வழங்கலாம்.<br>2)பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>3)மதிப்பீட்டை விட 0.02ரூ குறைவாக கொடுத்த திரு. ளு.சுயஅடிடய ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>E1/01158/2015 | 110) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக் கப்பட்டது. அலுவலகக் குறிப்பு 3 அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **8)** Est.No: 126/17-18<br><br>Est.Amt: 46.00 Lakhs<br><br>இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – நுண்ணுயிர் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி அண்ணாநகர் 12வது தெரு அருகில் நுண்உரம் செயலாக்கும் மையம் அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.46,00,000/–க்கு பணிக்கு 01.11.2017 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது.<br><br>1. திரு, T.Murugan<br><br>மதிப்பீட்டை விட 0.19% குறைவு (ரூ.4538305.95)<br><br>2. திரு. J.Suresh Jeyakumar<br><br>மதிப்பீட்டை விட 1.11% அதிகம் (ரூ.4597218.95)<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீடு கொடுத்துள்ள திரு. கூ. முருகன் அவர்களின் (மதிப்பீட்டை விட 0.19ரூ குறைவு (ரூ.4538305.95)) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :**<br><br>1) மேற்படி மதிப்பீடு தொகை ரூ.46.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கலாம்.<br>2) பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மதிப்பீட்டை விட 0.19ரூ குறைவாக கொடுத்த திரு. T.Murugan ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>E1/01158/2015 | 111) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக் கப்பட்டது. அலுவலகக் குறிப்பு 3 அனுமதிக் கப்பட்டது. |
| | **9)** Est.No: 127/17-18 Est.Amt: 46.00 Lakhs<br><br>இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – நுண்ணுயிர் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி என்.ஜி.ஓ காலனி பகுதியில் நுண்உரம் செயலாக்கும் மையம் அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.46,00,000/–க்கு பணிக்கு 01.11.2017 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது. | 112) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக் கப்பட்டது. அலுவலகக் குறிப்பு 3 அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 1. திரு. S.Sutharson<br><br>மதிப்பீட்டை விட 0.02% குறைவு (ரூ.4545738.95)<br><br>2. திரு. S.Rambola<br><br>மதிப்பீட்டை விட 3.54% அதிகம் (ரூ.4707960.00)<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீடு கொடுத்துள்ள திரு. S. சுதர்சன் அவர்களின் (மதிப்பீட்டை விட 0.02ரூ குறைவு (ரூ.4545738.95)) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br><br>1) மேற்படி மதிப்பீடு தொகை ரூ.46.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கலாம்.<br>2) பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மதிப்பீட்டை விட 0.02ரூ குறைவாக கொடுத்த திரு. S.Sutharson ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>E1/01158/2015 | |
| | 10) Est.No: 128/17-18 Est.Amt: 46.00 Lakhs<br><br>இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – நுண்ணுயிர் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி மூன்றாம் மைல் பக்கிள் ஓடை அருகில் நுண்உரம் செயலாக்கும் மையம் அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.46,00,000/–க்கு பணிக்கு 01.11.2017 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது.<br>1) திரு. S.Sutharson<br>மதிப்பீட்டை விட 0.02ரூ குறைவு (ரூ.4545738.95)<br><br>2) திரு. S.Rambola<br>மதிப்பீட்டை விட 3.68ரூ அதிகம் (ரூ.4714067.00)<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீடு கொடுத்துள்ள திரு. ளு. சுதர்சன் அவர்களின் (மதிப்பீட்டை விட 0.02ரூ குறைவு (ரூ.4545738.95)) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>1) மேற்படி மதிப்பீடு தொகை ரூ.46.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கலாம்.<br>2) பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். | 113) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக் கப்பட்டது.<br>அலுவலகக் குறிப்பு 3 அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 3) மதிப்பீட்டை விட 0.02ரூ குறைவாக கொடுத்த திரு. S.Sutharson ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். E1/01158/2015 | |
| | 11) Est.No: 131/17-18 Est.Amt: 49.50 Lakhs<br><br>இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – நுண்ணுயிர் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி மீளவிட்டான் அருகில் நுண்உரம் செயலாக்கும் மையம் அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.49,50,000/–க்கு பணிக்கு 01.11.2017 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது.<br>1. திரு. V.Thangaraj<br><br>மதிப்பீட்டை விட 0.24% குறைவு (ரூ.4874405.50)<br><br>2. திரு. R.Thangaraj<br><br>மதிப்பீட்டை விட 3.02% அதிகம் (ரூ.5033345.50)<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீடு கொடுத்துள்ள திரு.ஏ.தங்கராஜ் அவர்களின் (மதிப்பீட்டைவிட 0.24ரூகுறைவு (ரூ.4874405.50)) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br><br>1)மேற்படி மதிப்பீடு தொகை ரூ.49.50 இலட்சத்திற்கு அனுமதி வழங்கலாம்.<br>2)பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>3)மதிப்பீட்டை விட 0.24% குறைவாக கொடுத்த திரு. V.Thangaraj ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>E1/01158/2015 | 114) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக் கப்பட்டது. அலுவலகக் குறிப்பு 3 அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 12) Est.No: 132/17-18 Est.Amt: 49.50 Lakhs<br><br>இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – நுண்ணுயிர் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி சங்கரப்பேரி (பண்டாரம்பட்டி) பகுதியில் நுண்உரம் செயலாக்கும் மையம் அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.49,50,000/–க்கு பணிக்கு 01.11.2017 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது.<br><br>1)திரு. J.Suresh Jeyakumar<br>மதிப்பீட்டை விட 0.19% குறைவு (ரூ.4876538.00)<br>2)திரு. T.Murugan<br>மதிப்பீட்டை விட 1.16% அதிகம் (ரூ.4942433.00)<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீடு கொடுத்துள்ள திரு. J.சுரேஷ் ஜெயக்குமார் அவர்களின் (மதிப்பீட்டை விட 0.19ரூ குறைவு (ரூ.4876538.00)) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :**<br><br>1) மேற்படி மதிப்பீடு தொகை ரூ.49.50 இலட்சத்திற்கு அனுமதி வழங்கலாம்.<br>2) பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மதிப்பீட்டை விட 0.19% குறைவாக கொடுத்த திரு. J.Suresh Jeyakumar ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>E1/01158/2015 | 115) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக் கப்பட்டது. அலுவலகக் குறிப்பு 3 அனுமதிக் கப்பட்டது. |
| | 13) Est.No: 133/17-18 Est.Amt: 49.50 Lakhs<br><br>இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – நுண்ணுயிர் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி செல்சீனி காலனி பகுதியில் நுண்உரம் செயலாக்கும் மையம் அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.49,50,000/–க்கு பணிக்கு 01.11.2017 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது.<br><br>1)திரு. I.Jeyaseelan<br>மதிப்பீட்டை விட 0.20ரூ குறைவு (ரூ.4876153.02)<br>2)திரு. S.Innasimuthu<br>மதிப்பீட்டை விட 2.77ரூ அதிகம் (ரூ.5021406.00)<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீடு கொடுத்துள்ள திரு. I. ஜெயசீலன் அவர்களின் (மதிப்பீட்டை விட 0.20% | 116) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக் கப்பட்டது. அலுவலகக் குறிப்பு 3 அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | குறைவு (ரூ.4876153.02)) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :**<br>1)மேற்படி மதிப்பீடு தொகை ரூ.49.50 இலட்சத்திற்கு அனுமதி வழங்கலாம்.<br>2)பணியாளர் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>3)மதிப்பீட்டை விட 0.20% குறைவாக கொடுத்த திரு. ஐ.துநலயளநடயே ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>E1/01158/2015 | |
| | 14) Est.No: 134/17-18 Est.Amt: 49.50 Lakhs<br><br>இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – நுண்ணுயிர் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி கம்போஸ்ட் யார்ட் பகுதியில் நுண்உரம் செயலாக்கும் மையம் அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.49,50,000/–க்கு பணிக்கு 01.11.2017 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது.<br><br>1. திரு. S.Innasimuthu<br>மதிப்பீட்டை விட 0.20% குறைவு (ரூ.4876153.02)<br><br>2. திரு. I.Jeyaseelan<br>மதிப்பீட்டை விட 2.77% அதிகம் (ரூ.5021476.00)<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீடு கொடுத்துள்ள திரு. S. இன்னாசிமுத்து அவர்களின் (மதிப்பீட்டை விட 0.20% குறைவு (ரூ.4876153.02)) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>1)மேற்படி மதிப்பீடு தொகை ரூ.49.50 இலட்சத்திற்கு அனுமதி வழங்கலாம்.<br>2)பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>3)மதிப்பீட்டை விட 0.20ரூ குறைவாக கொடுத்த திரு. S.Innasimuthu ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>E1/01158/2015 | 117) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக் கப்பட்டது. அலுவலகக் குறிப்பு 3 அனுமதிக் கப்பட்டது. |
| | 15) இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மலேரியா தடுப்பு திட்டத்தின் மூலம் கொசுக்களால் பரவும் நோய்களான டெங்கு மற்றும் மலேரியா போன்றவற்றை தடுக்கும் பொருட்டு மாநகரப் பகுதிகளில் கொசுப்புழுக்களை கட்டுபடுத்தும் | 118) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | புகை மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது. மேற்படி புகை மருந்தில் கலந்து தெளிக்க பயன்படுத்தப்படும் டீசல் மற்றும் பெட்ரோல் அவசர அவசியம் கருதி வாங்கவும் அதற்காக ஏற்படும் உத்தேச செலவுத் தொகை (ரூ. 15,00,000/–) மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம். எச்2/9462/12 | |
| | 16)தூத்துக்குடி மாநகராட்சியில் தற்போது அம்ருத் திட்ட பணிகள், மற்றும் ஸ்மார்ட் சிட்டி திட்டப் பணிகள் அவ்வப்போது அரசால் கோரப்படும் இதரத்திட்ட பணிகளுக்கான புள்ளிவிபரங்கள் சேகரித்தல், பணிகள் தொடர்பான களப்பணிகள் மேற்கொள்ளுதல் போன்ற பணிகள் மேற்கொள்ள பொறியியல் பிரிவில் போதுமான தொழில்நுட்ப பணியாளர்கள் இல்லாத காரணத்தால் பணிகள் தொடர்பான புள்ளிவிபரங்களை அரசுக்கு அனுப்புவதில் காலதாமதம் ஏற்படுகிறது.<br><br>தற்போது பொறியியல் பிரிவில் 3 தொழில்நுட்ப பணியாளர்கள் மட்டுமே இருந்து வருகின்றனர். மேற்படி பணியாளர்கள் மூலம் தற்போது அரசால் அறிவித்து நடைபெற்று வரும் சாலை திட்டப் பணிகள் மற்றும் மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வரும் பொது நிதி பணிகள் ஆகியவற்றிற்கான களப்பணிகள் மேற்பார்வையிட்டு கண்காணித்து வரப்படுகின்றன.<br>எனவே பொறியியல் பிரிவில் தொழில்நுட்ப பணிகள் மேற்கொள்ள கட்டிட பொறியாளர் பட்டயபடிப்பு படித்தவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் பட்டயப்படிப்பு பொறியாளர் பிரிவு அல்லது தொழிற்பயிற்சி கட்டிட பிரிவு தேர்ச்சி பெற்றவர்கள் நிலை 3 இல், தகுதி வாய்ந்த 8 நபர்கள் தொழில்நுட்ப பணியாளர்களாக ஒப்பந்த அடிப்படையில் 6 மாத காலத்திற்கு வெளிகொணர்வு (Out Sourcing) முறையில் வழங்கும் பணியினை மேற்கொள்ளவும் அதற்கான செலவினத் தொகை ரூ 10.00 லட்சத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேலும் பின்வரும் நிபந்தனைகளை அங்கீகரிக்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>1) மாவட்ட ஆட்சியர் அலுவலக தினக்கூலி நிர்ணய விலைவிகிதத்தில் அல்லது அரசால் அவ்வப்போது நிர்ணயிக்கும் குறைந்தபட்ச ஊதிய அடிப்படையில் மாநகராட்சியால் தொகை வழங்கப்படும்.<br>2) ஒப்பந்த நிறுவனம் தொழிலாளர் நலத்துறையில் பதிவு பெற்ற நிறுவனமாக இருக்க வேண்டும்.<br>3) ஒப்பந்த நிறுவனம் பணியாளர்களை வேலைக்கு அனுப்பியதில் குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். அதற்கான சான்றிதழ் இணைக்க வேண்டும்.<br>4) தொழிலாளர் நல வாரிய உறுப்பினருக்கான ஆவணம் மற்றும் தொழிலாளர் நலத்துறையில் ஒப்பந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.<br>5) டெண்டரில் கலந்து கொள்ளும் நிறுவனம் கடந்த இரண்டு | 119) அலுவலகக் குறிப்பு 1 அனுமதிக்கப் பட்டது. அலுவலகக் குறிப்பு 2 மற்றும் 3 அங்கீகரிக் கப்பட்டது |

வருடங்களுக்கு தங்களால் சப்ளை செய்யப்பட்ட பணியாளர்களுக்கு E.S.I மற்றும் E.P.F. செலுத்தியதற்கான சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.

6) தொழில்நுட்ப உதவியாளர் பணிபுரிந்த அனுபவம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
7) தங்களால் சப்ளை செய்யப்படும் பணியாளர்களுக்கும் இம்மாநகராட்சி நிர்வாகத்திற்கும் எந்தவிதமான நேரடி தொடர்பும் கிடையாது மற்றும் வேலை வாய்ப்பின் அடிப்படையில் எதிர்காலத்தில் முன்னுரிமை எதுவும் கோரக்கூடாது.
8) சப்ளை செய்யப்படும் பணியாளர்கள் அனைவருக்கும் மொத்தமாக தங்களது நிறுவனம் மூலம் குரூப் இன்சூரன்ஸ் செய்து கொள்ள வேண்டும்.
9) சப்ளை செய்யப்படும் பணியாளர்களுக்கு பணி நேரத்தில் எதிர்பாராத விபத்துக்கள் அல்லது இறப்பு ஏற்பட்டால் நிறுவனம்தான் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும். மாநகராட்சி நிர்வாகம் எவ்விதத்திலும் பொறுப்பு ஏற்காது.
10) சப்ளை செய்யப்படும் அனைத்து பணியாளர்களின் விவரங்கள் அடங்கிய பட்டியல் மற்றும் அவர்களின் புகைப்படம் அடங்கிய பட்டியல் ஒரு நகல், இருப்பிட முகவரிகளை பணிபுரியும் இடத்திலுள்ள பொறுப்பு அலுவலர்களிடம் ஒப்படைப்பு செய்வதுடன் அலுவலகத்தில் ஒரு நகல் ஒப்படைப்பு செய்ய வேண்டும்.
11) பணியாளர்கள் அனைவரும் தங்களது வீடுகளில் தனி நபர் கழிப்பறை பயன்படுத்தப்பட வேண்டும். திறந்தவெளி கழிப்பிடங்களை பயன்படுத்த மாட்டோம் என உறுதி மொழி பெற்று மாநகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும்.
12) நிபந்தனைகளில் மீறல் இருந்தாலோ அல்லது மாநகராட்சி நிர்வாகம் இப்பணியை நிறுத்தம் செய்ய விரும்பினலோ எந்த நேரத்திலும் எவ்வித முன் அறிவிப்புமின்றி ஒப்பந்தத்தை ரத்து செய்ய ஆணையாளர் அவர்களுக்கு முன் அதிகாரம் உண்டு.
13) சுழற்சி முறையில் பணியாளர்களுக்கு வாரம் ஒரு நாள் ஊதியத்துடன் விடுப்பு வழங்க வேண்டும் . சீருடைய கண்டிப்பாக அணிந்திருக்க வேண்டும். மேலும் சீருடை அடையாள அட்டை மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் தங்கள் பொறுப்பில் வழங்கப்பட வேண்டும்.

அலுவலக குறிப்பு

1) தகுதி வாய்ந்த 8 நபர்கள் தொழில்நுட்ப பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் 6 மாத காலத்திற்கு வெளிகொணர்வு ( Out Sourcing) முறையில் வழங்கும் பணியினை மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தொகை ரூ 10.00 லட்சத்திற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட ஒப்பந்தப்பணிக்கான நிபந்தனைகளை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.
3) மேற்கண்ட பணிகளுக்கு ஆணையர் அவர்களால் ஒப்பந்தப்புள்ளி

| | | |
|---|---|---|
| | கோர வழங்கப்பட்ட முன் அனுமதியினை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>இ1/4732/2017 | |
| | 17) Est.No: 125/17-18 Est.Amt: 49.50 Lakhs<br>இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி கந்தசாமிபுரம் மெயின் ரோடு மற்றும் அழகேசபுரம் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ 72,00,000/–க்கு பணிக்கு 11.10.2017 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது.<br><br>1)திரு. S.Rambola<br>மதிப்பீட்டை விட 0.51% குறைவு (ரூ.6807570.00)<br><br>2)திரு. S.Sutharson<br>மதிப்பீட்டை விட 0.16% அதிகம் (ரூ.6831335.00)<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீடு கொடுத்துள்ள திரு.ளு. ரம்போலா அவர்களின் (மதிப்பீட்டை விட 0.51% குறைவு (ரூ.6807570.00)) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு :<br>1)மேற்படி மதிப்பீடு தொகை ரூ.72.50 இலட்சத்திற்கு அனுமதி வழங்கலாம்.<br><br>2)பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>3)மதிப்பீட்டை விட 0.51% குறைவாக கொடுத்த திரு. S.Rambola ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்திரவு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>E1/3671/2016 | 120)அலுவலகக் குறிப்பு 1 ,2 மற்றும் 3 அனுமதிக் கப்பட்டது |
| | 18) Est.No: 125/17-18 Est.Amt: 49.50 Lakhs<br><br>இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்ட பணியில் தூத்துக்குடி மாநகராட்சி குறிஞ்சி நகர் 3, 4 மற்றும் 5வது குறுக்குத் தெரு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ 52,00,000/–க்கு பணிக்கு 11.10.2017 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது.<br><br>1)திரு. J.Suresh Jeyakumar<br>மதிப்பீட்டை விட 0.50% குறைவு (ரூ.4695597.50) | 121) அலுவலகக் குறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 2)திரு. Immanuel & Co.<br>மதிப்பீட்டை விட 0.71% அதிகம் (ரூ.47524855.00)<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீடு கொடுத்துள்ள திரு. J,Suresh Jeyakumar அவர்களின் (மதிப்பீட்டை விட 0.50% குறைவு (ரூ.4695597.50)) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :**<br>1)மேற்படி மதிப்பீடு தொகை ரூ.52.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கலாம்.<br><br>2)பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>3)மதிப்பீட்டை விட 0.50% குறைவாக கொடுத்த திரு. . J.Suresh Jeyakumar ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்திரவு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>E1/3671/2016 | |
| | 19) இம்மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரியும் ஆண், பெண் துப்புரவு பணியாளர்கள் மற்றும் மலேரியா பணியாளர்களுக்கு 2017ம் ஆண்டுக்கான சீருடை மற்றும் தையற்கூலி வழங்கப்பட வேண்டியுள்ளதால், அரசாணை எண். 283 நாள் 18.06.1996ன் படி , துணி வகைகளை தமிழ்நாடு காதி கிராப்ட் வாரியத்தில் வாங்குவதற்கும் மற்றும் மேற்படி பணியாளர்களுக்கு தையற்கூலி வழங்குவதற்கும் ஆகும் உத்தேச செலவினமாக தொகை ரூ 10.00 (பத்து இலட்சம் மட்டும்) இலட்சத்தை மாநகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம். எச்2/4551/17 | 122) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | 20) இம்மாநகராட்சி பொது சுகாதாரப்பணிகளுக்கு அரசாணை எண் 101ன் படி தேவையான சுகாதார ஆய்வாளர்களின் எண்ணிக்கை 40 ஆகும் என்றும் ஆனால் அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் 18 ஆகும் என்றும் இதில் தற்போது ஒரே ஒரு சுகாதார ஆய்வாளர் மட்டும் மாற்று பணியின் மூலம் இம்மாநகராட்சியில் பணிபுரிந்து வருகிறார் என்பதால் தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ் தூய்மை கணக்கெடுப்பு பணிகளை முழு அளவில் திறம்பட மேற்கொண்டு அவற்றை முறையாக ஆவணப்படுத்தி கணக்கெடுப்பு குழுவிற்கு சமர்ப்பிப்பதில் மிகுந்த சிரமம் ஏற்படுவதாலும் இம்மாநகராட்சி தூய்மை கணக்கெடுப்பு தரவரிசை பட்டியலில் 396வது இடத்தில் ரின்தங்கிய நிலையில் உள்ளதாலும் இதனை மாற்றி தரவரிசை பட்டியலில் நல்ல முன்னேற்றத்தினை எய்திட ஏதுவாகவும் இப்பணிகள் குறித்த விபர அறிக்கைகளை பெற்று முறைப்படுத்தி பராமரித்து ஆவணப்படுத்தி கணக்கெடுப்பு குழுவிற்கு சமர்ப்பிப்பதில் மிகுந்த சிரமம் ஏற்படுவதாலும் இம்மாநகராட்சி தூய்மை கணக்கெடுப்பு தரவரிசை பட்டியலில் 396வது இடத்தில் பின் தங்கிய நிலையில் உள்ளதாலும் இதனை மாற்றி தரவரிசை | 123) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | பட்டியலில் நல்ல முன்னேற்றத்தினை எய்திட ஏதுவாகவும் இப்பணிகள் குறித்த விபர அறிக்கைகளை பெற்று முறைப்படுத்தி பராமரித்து ஆவணப்படுத்தி கணக்கெடுப்பு குழுவிற்கு சமர்ப்பித்திடவும் பொது சுகாதாரம் தொடர்பான முன்னேற்ற நடவடிக்கைகளில் நவீன உத்திகளை கையாண்டு திறம்பட செயல்படுத்திடவும் இப்பணிக்கு பிரத்தியோகமாக ஒரு நபரை தூய்மை ஆலோசகராக அவசியம் கருதி தற்காலிகமாக தொகுப்பூதியத்தில் 6 மாதங்களுக்கு வெளிக்கொணர்வு முறையில் (outsourcing) தேர்வு செய்து மேற்படி பணிகளை மேற்கொள்ளவும் இதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ 1,50,000/– க்கும் (ஒரு லட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** அனுமதிக்கலாம் எச்1/4663/2017 | |
| | 21) தூத்துக்குடி மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவு மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகள், பிறப்பு, இறப்பு, பதிவுகள் செய்தல் அச்சம் மற்றும் அருவருக்கத்தக்க இனங்கள் மீதான உரிமையாணைக் கட்டணம் வசூல் செய்தல், டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் தெரு நாய்களுக்கான கருத்தடை நடவடிக்கைகள் இதர தொற்று நோய் தடுப்பு பணிகள் தூய்மை இந்தியா திட்ட பணிகள் தூய்மை கணக்கெடுப்பு போன்ற பல்வேறு பொது சுகாதாரப் பணிகளுக்கு தேவையான சுகாதார ஆய்வாளர்களின் எண்ணிக்கை 40 ஆகும் என்றும் ஆனால் அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் 18 ஆகும் என்றும் இதில் தற்போது ஒரே ஒரு சுகாதார ஆய்வாளர் மட்டும் மாற்று பணியின் மூலம் இம்மாநகராட்சியில் பணிபுரிந்து வருகிறார் என்பதால் தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ் தூய்மை கணக்கெடுப்பு பணிகளை முழு அளவில் திறம்பட மேற்கொண்டு அவற்றை முறையாக ஆவணப்படுத்தி கணக்கெடுப்பு குழுவிற்கு சமர்ப்பிப்பதில் மிகுந்த சிரமம் ஏற்படுவதாலும் இம்மாநகராட்சி தூய்மை கணக்கெடுப்பு தரவரிசை பட்டியலில் 396வது இடத்தில் பின் தங்கிய நிலையில் உள்ளதாலும் இதனை மாற்றியமைத்திடவும் பொது சுகாதாரப் பணிகள் தொய்வின்றி நடத்திடவும் வேண்டிய அவசியமான ஒன்றாகும்.<br><br>எனவே மேற்படி குறைபாடுகளை சரி செய்ய மதுரை மாநகராட்சி போன்றவற்றில் ஈடுபடுத்தப்படும் தூய்மை காவலர் போன்று இம்மாநகராட்சியிலும் ஏதாவது ஒரு பட்டபடிப்பில் தேர்ச்சி / சுகாதார ஆய்வாளர் பயிற்சி பெற்ற நபர்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலும் 6 மாதத்திற்கு தற்காலிகமாக 10 நபர்களை வெளி கொணர்வு (outsourcing) தேர்வு செய்திடவும் 10 நபர்களுக்கு 6 மாதத்திற்கு ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ 10,00,000/–க்கும் (பத்து லட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு –** அனுமதிக்கலாம். எச்1/4664/2017 | 124. அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |
| | 22) முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அவர்களின் தலைமையில் 01.09.2017 அன்று நடைபெற்ற தூய்மை இந்தியா திட்டத்தின் 5வது மாநில உயர்மட்ட குழு கூட்ட நடவடிக்கைகளில் தீர்மானம் எண். 11ல் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் நுண் உரக்கிடங்கு அமைக்கும் பணியினை உள்ளாட்சி அமைப்புகளில் ஒரே மாதிரியான மதிப்பீட்டில் | 124 அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | மேற்கொள்ள பின்வரும் பட்டியலில் கண்டுள்ள பணிகளுக்கு அனுமதியளித்துள்ளது. | |

| வ.எண் | பணிகளின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மாநகராட்சிப் பகுதியில் 16 இடங்களில் நுண் உரக்கிடங்கு அமைக்கும் பணி | 765.00 |
| 2 | இலகுரக வாகனம் 74 எண்ணம் வாங்குதல் (2.0 Cum ACE Box Tipper BS4) | 414.40 |
| 3 | தூர்வாறும் இயற்திரம் 1 எண்ணம் வாங்குதல் Track SFC 709 EX with PTO 90HP bucket 0/5cm volume Digging depth 2m Arm radius 1 No.) | 29.95 |
| 4 | பிளாஸ்டிக் கன்டெய்னர் பாக்ஸ் (30 லிட்டர்) தள்ளுவண்டி 200 எண்ணம் வாங்குதல் | 14.10 |
| 5 | HDPE Bins (எச்டிபிஈ குப்பைத்தொட்டி ) 200 லிட்டர் 260 எண்ணம் வாங்குதல் | 18.20 |
| 6 | HDPE Bins (எச்டிபிஈ குப்பைத்தொட்டி ) 200 லிட்டர் 200 எண்ணம் வாங்குதல் | 2.00 |
| | மொத்தம் | 1243.65 |

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற கூட்ட நடவடிக்கைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

மேலும் பட்டியலில் வரிசை எண். 1ல் உள்ள ரூ 765.00 மதிப்பீட்டில் நுண் உரக்கிடங்கு அமைக்கும் பணிகளை அவசர அவசியம் கருதி மாநகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு வந்த பின்பு மேற்கண்ட பணிகளுக்கு பொது நிதியில் மேற்கொள்ளப்படும் செலவினத்தை தூய்மை இந்தியா திட்ட நிதியில் ஈடு செய்ய இம்மாநகராட்சி மாமன்றத்திதீர்மானம் எண். 89 06–10–2017ல் அனுமதியளித்துள்ளது. மேலும் நுண் உரக்கிடங்கு அமைப்பதற்கு தேர்வு செய்யப்பட்ட 16 இடங்களிலும் பணிகள் மேற்கொள்ள தனித்தனி பணிகளாக கருதி நிர்வாக அனுமதியானது 27.09.2017 அன்று வழங்கப்பட்டு 01.11.2017 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது.

மேற்காணும் பட்டியலில் வரிசை எண் 2 முதல் 6 வரை உள்ள விபரப்படி நுண் உரக்கிடங்கு அமைக்கும் பணிக்கு தேவையான வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

தூய்மை இந்தியா திட்டத்தின் 01.09.2017 அன்று நடைபெற்ற 5வது மாநில உயர்மட்டக்குழு கூட்ட நடவடிகைகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு தூத்துக்குடி மாநகராட்சியில் நுண் உரக்கிடங்கு அமைத்தல், அதற்கு தேவையான இலகுரக வாகனங்கள் வாங்குதல் மற்றும் தள்ளுவண்டி, 200 லிட்டர் கொள்ளவு கொண்ட குப்பைத்தொட்டிகள் மற்றும் 50 லிட்டர் கொள்ளவு கொண்ட குப்பைத்தொட்டிகள் வாங்குதல் போன்ற பணிகளுக்கு ரூ. 1243.65 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் தூய்மை இந்தியா திட்ட நிதியில் மத்திய அரசு 35 சதவிகிதம் பங்கு தொகையாக ரூ 435.28 லட்சமும், மாநில அரசு 55 சதவிகிதம் பங்கு தொகையாக ரூ. 684.01 லட்சமும், மாநகராட்சி 10 சதவிகிதம் பங்குதொகையாக ரூ 124.36 லட்சமும் நிதி ஒதுக்கீடு செய்து உத்திரவிட்டுள்ளது. எனவே மேற்கண்ட திட்ட நிதியில் மாநகராட்சி பங்கு தொகை ரூ 124.36 லட்சத்தினை மாநகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** அ) மாமன்றம் பதிவு செய்யலாம்.
ஆ)மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ1/1158/2015

| | | |
|---|---|---|
| | 23) ம.ப.எண். 156/17/18<br>ம.ப.தொகை, 119.00 லட்சம்<br>இம்மாநகராட்சியில் மத்திய நிதிக்குழு மானிய திட்டம் 2017–18ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி மடத்தூர் சாலை (சோரீஸ்புரம், இ.பி. காலனி) கலெக்டர் அலுவலகம் சந்திப்பு முதல் மடத்தூர் விலக்கு மதுரை பைபாஸ் சாலை வரை தார் சாலை அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரு. 1,19,00,000/–க்கு பணிக்கு 14.10.2017 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது.<br>1) திரு .S. Innasimuthu<br>மதிப்பீட்டை விட 0.07 சதவிகிதம் குறைவு (ரூ.9466577.50)<br>2) திரு. I. Jeyaseela<br>மதிப்பீட்டை விட 0.07 சதவிகிதம் குறைவு (ரூ.9487280.00)<br><br>வரப்பட்டஇரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீடு கொடுத்துள்ள திரு எஸ். இன்னாசிமுத்து அவர்களின் (மதிப்பீட்டை விட 0.07 சதவிகிதம் குறைவு (ரூ 9466577.50) ஒப்பந்தப்புள்ளியிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டது ஒப்புநோக்கு பட்டியல்)<br><br>1) திரு .S. Innasimuthu<br>மதிப்பீட்டை விட 0.07 சதவிகிதம் குறைவு (ரூ.9466577.50)<br>2) திரு. I. Jeyaseela<br>மதிப்பீட்டை விட 0.07 சதவிகிதம் குறைவு (ரூ.9487280.00)<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. எஸ். இன்னாசிமுத்து அவர்களின் (மதிப்பீட்டை விட 0.50 சதவிகிதம் குறைவு (ரூ. 9426602.50) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1) மதிப்பீட்டை விட 0.50 சதவிகிதம் குறைவாக கொடுத்த திரு எஸ். இன்னாசிமுத்து ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2) மேற்படி பணியின் அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ROC. 2608/2017/DO2 | 126) அலுவலகக் குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது<br>1)அலுவலகக் குறிப்பு 2 அங்கீகரிக் கப்பட்டது. |

ஆணையர் மற்றும் தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி
நாள்: 16.11.2017